DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 19/2020**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **கோபால்** | Caste | : | |
| Father Name | : | **கருப்பண்ணன்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **09.01.2026.**

**PW - 15**

**(1** முதல் **6** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், துறையூர் தாலுக்கா, எரகுடி கிராமத்தில் குடியிருக்கிறேன். அயர்ன்மேன் வேலை செய்கிறேன். ஆஜர் 1 முதல் 6 எதிரிகளை தெரியாது. கார்த்திக் என்பவரை தெரியாது. இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

*(சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது, ஆவணங்களை பரிசீலித்து அனுமதி வழங்கப்பட்டது)*

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அதில் கடந்த 25.05.2019 அன்று காலை சுமார் 09.00 மணிக்கு நான் வேலைக்கு வந்தபோது அன்று காலை 08.30 மணியளவில் கார்த்திக் என்பவர் தன் நண்பர் காரை

ஓட்டிப்பார்ப்பதற்காக எடுத்து எரகுடி விஏஓ அலுவலகம் அருகே சிதம்பரம் என்பவர் மீது மோதி நிற்காமல் சென்றுவிட்டதாகவும், அதனால் சிதம்பரத்தின் உறவினர்களான ஆஜர் எதிரிகள் 6 பேரும் கார்த்திக்கை பிடித்து அடித்துவிட்டதாகவும், அன்று மதியம் கார்த்திக் எரகுடி வீரப்பன் வாழைத்தோட்டத்திற்கு அருகில் உள்ள சமாதியில் இறந்துகிடப்பதாக கேள்விட்டேன் என்றும், எதிரிகள் தலைமறைவாகிவிட்டதாகவும், பின்னிட்டு ஆய்வாளர் வரதராஜனை தவிர மற்றவர்களை கைது செய்ததாக கேள்விபட்டேன் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.